**சுருக்கம்**

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு க.சதீஷ்குமார் (த/பெ. காலஞ்சென்ற திரு. கே.கபாலி) – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொதுப்பணி (பி1) துறை**

அரசாணை (3ப) எண்.08

நாள் : 19.02.2020
விகாரி, மாசி 7,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டன:

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை சென்னை கடித எண். எஸ்12(2)/30219/2018, நாள் 28.02.2019 மற்றும் 21.05.2019.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

---

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், உதவி செயற்பொறியாளர் உயர்நீதிமன்ற உபகோட்டம், சென்னை அலுவலகத்தில் திரு.கே.கபாலி அவர்கள், பணியாளர் (மஸ்தூர்) ஆகப் பணிபுரிந்த போது 29.11.2006 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர்/ மகன் திரு க.சதீஷ்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் அளிக்கப்பட்டு அவர் 06.09.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அவர் அப்பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு தேர்வில் மார்ச் 2000 –இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரது பிறந்த தேதி 08.04.1984 ஆகும் என்றும், அவர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றுள்ளார் என்றும், தனியர் திரு க.சதீஷ்குமார் அவர்களின் பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றாவணங்களையும் அரசுக்கு அனுப்பி வைத்து, தனியர் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 06.09.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திரு க.சதீஷ்குமார், இளநிலை உதவியாளர் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 06.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், பணிநியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அ.சா.எண். 23773/க்யூ2/ 2019–1, நாள். 12.02.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா. எண். 5778/ஜி2/2020, நாள் 14.02.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசகன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை–5.
✓திரு க.சதீஷ்குமார், இளநிலை உதவியாளர்.
(முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை–5 வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை –18.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை /
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

24.02.2020
பிரிவு அலுவலர்

24.2.20